1971 டிசம்பர் 16]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தற்போது மீனாட்சி ஆலயத்தில் இருக்கும் நிர்வாக அதிகாரியே அதையும் செய்கிறார்கள். தனியாக ஒருவர் அங்கே தேவையில்லை யென்றாலும், பொதுமக்களுக்கு வசதி செய்யவும், ஏதாவது குறைபாடுகள் இருந்தால், தெரிவித்தால் நிவர்த்திக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அமைச்சர் அறிக்கை.

மாநில இந்திய தேசியப் பாதுகாப்புக் கிளைக்குழுவிற்குக் கூடுதல் உறுப்பினர்களை இணைப்பது குறித்து முதலமைச்சர் அறிக்கை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாநில இந்திய தேசியப் பாதுகாப்புக் கிளைக் குழுவில் ஏற்கனவே உறுப்பினர்களும் தலைவர்களும் அறிவிக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் மேலும் உறுப்பினர்களாக, ஃபார்வேர்ட் பிளாக் கட்சியைச் சேர்ந்த திரு. மூக்கையா தேவர் அவர்களையும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. எம். கல்யாண சுந்தரம் அவர் களையும், தமிழ்நாடு சோஷலிஸ்ட் பார்ட்டியின் தலைவர் திரு. பி. வேலுசாமி அவர்களையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(3) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) திரு. இராஜாஜி மீதும், 'ஸ்வராஜ்யா' வார ஏட்டின் மீதும் அரசு எடுக்க உத்தேசித்திருக்கும் நடவடிக்கை குறித்து.

(ஆ) 'ஸ்வராஜ்யா' வார ஏட்டில் யாஹ்யாகானை ஆதரித்து திரு. ராஜாஜியால் எழுதப்பட்ட கட்டுரையும், அது கல்கி வார ஏட்டில் வெளியிடப்பட்டது குறித்தும், இவற்றை அரசு தடுக்கத் தவறியது குறித்தும்.

MR. SPEAKER : Dr. Hande has given notice of an adjournment motion under Rule 42, namely, that this House stands adjourned to discuss a matter of urgent public importance, namely, the move on the part of the State Government to take action against Rajaji and the weekly 'Swarajya on account of the writings of Rajaji in the 'Swarajya', dated 11th December 1971 and the need for restraint in the use of the Defence of India Rules. Thiru M. A. Latheef and Thiru K. T. K. Thangamani have also given notice of similar adjournment motions. Now I call upon Dr. H. V. Hande to explain briefly how it comes under the purview of an adjournment motion.